உ

சத்குருகடாக்ஷம்.

நெட்டூர் ஸ்ரீ அப்பரானந்தர்,

# நான்மணிமாலை.

# தோத்திரப்பாமாலை.

இவை

சிந்துபூந்துறைத் தக்ஷிணாமூர்த்தி ஆச்சிரம

மடாலய அதிபதியவர்களாகிய

பிர்மஸ்ரீ

M. வேதநாயகசுவாமி அவர்களால்

இயற்றியது.

நெட்டூர்

ம-ள-ள-ஸ்ரீ

சு. கி. இராமலிங்கம்பிள்ளை அவர்கள்

விரும்பிய வண்ணம்.

திருநெல்வேலிப்பாலம்

பெண்ட்லெண்ட் பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

[இதன் விலை அணா 2]

1917.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|

## சிறப்புப்பாயிரம்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 5 | டடுப்பச | டெடுப்பச் |
| 8 | 5 | செல்வச் | செவ்விச் |
| 8 | 6 | தோற்று | தோற்றுவித் |
| 8 | 14 | நாட்டித்த | நாட்டிற் |

## நான்மணிமாலை.

| | | | |
|---|---|---|---|
| 8 | 2 | பொளிவு | பொலிவு |
| 10 | 10 | நலிந்ஙி | நலிந்தி |
| 11 | 12 | [illegible] | குறும்பி |
| 14 | 17 | புறுதற்க் | புறுதற் |
| 22 | 8 | ” | 40 |

## தோத்திரமாலை.

| | | | |
|---|---|---|---|
| 2 | 25 | ஞுவத் | ஞுளத் |
| 3 | 1 | கிலை | கிறை |
| 5 | 26 | புரித் | புரிந் |

# நெட்டூர்,

## ஸ்ரீ அப்பரானந்த சுவாமிகளின் சரித்திரச் சுருக்கம்.

1. கங்காசூடரான சாக்ஷாத் சிவபெருமான், தேவியார் தடாதகைப்பிராட்டியார், குமாரர் சுப்பிரமண்ணியர், ஆக இம்மூவரும் அரசுசெலுத்திவந்த பாண்டியநாட்டின்கண், கடல்புடையுடுத்த திருமந்திரநகரமென்னும் தூத்துக்குடிக்குச் சமீபத்தில், முனிசிரேஷ்டர்கள் நிறைந்துள்ள பட்டினமருதூரில் சிர்குடிவேளாளர் குலத்து சிவருத்திர கோத்திரத்தில் எல்லாப் புலமைகளும் வாய்ந்த மகராஜப் புலவர், மதுரவல்லி அம்மையாரென்னும் மனைவியுடன் வாழ்ந்துவந்தார். அவர்கட்கு ஆதிமூலபபுலவர், அருணாசலப்புலவர், கந்தசாமிப்புலவர், நல்லகுமாருப்புலவர், சங்கிலிவீரப்புலவர், முத்தம்மாள், ஐயம்பெருமாள் புலவரென ஏழுபிள்ளைகள் பிறந்தார்கள்—இவர்களுள் ஐயன்பெருமாள் புலவருக்கு குலதெய்வமான சாத்தாவின் பெயரிட்டனர்.

2. திருவிக்கிரமனான மகாவிஷ்ணுவினுத்தரீயம்போல வெள்ளிய வருவிகள் ஒல்லென வொலித்துப்பாய்கின்ற திருக்குற்றால நகரைப் பிரதானமா

கக்கொண்ட சத்ஜன சமூகங்கள் சூழீஇய ஆரிய நாட்டிற் கணித்தாகிய முனி புங்கவர்கள் நிட்டை செய்துயரும் நிட்டைமாபுரியென்னும் நெட்டூரில் வேலுமயிலுப்பண்டிதருக்குக் கற்பிற்சிறந்த வுத்தமியாகிய முத்தம்மையாரை விவாகஞ்செய்து கொடுத்தார்கள்.

3. மேற்கண்ட ஐயன்பெருமாள்புலவர் பாலியத்திலேயே சகல சாஸ்திர விற்பன்ன சத்குண சம்பன்னராய் விளங்கினர். அப்போதவருக்குப் பூர்வ தபோபலமேலீட்டால், சுரண்டையிலிருந்து குழந்தை முத்தானந்தசுவாமிகள் பட்டினமருதூருக்கெழுந்தருளி அங்குத் தெருவில் சிறுவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்த ஐயன்பெருமாள் புலவரைக் கடாக்ஷித்து இவர்முன் சமதமாதிசம்பத்திகளைப் பயின்றுவிட்ட குணிறயினரெனத் தெரிந்து, இவருக்குத் தத்துவார்த்தங்களை உணர்த்துதற் கியன்ற பக்குவமுடையரெனக் கருதி, அவரைத் தனியே யவ்வூர் விநாயகர்கோவிலுக்கு அழைத்துப்போந்து, ஞானோபதேசஞ் செய்தனர். உடனே ஐயன்பெருமாள்புலவரும் குழந்தை முத்தானந்தசுவாமிகளைச் சாயைபோலப் பிரியமனமிலராய வருடன் மதுரைக்குச்சென்று குருபணிவிடைகளை விடாது முறையே செய்துவந்தனர்—அப்பால் தாய்தந்தையர் குழந்தையின் பிரிவாற்றாமைக்கு மனம் வருந்தினர். அக்காலத்தில் குலதெய்வமான சாத்

தா, கனவிற்றோன்றி யறிவித்தபின்னர் மனவாற்று மை நீங்கித் தந்தையார் மதுரைக்குச்சென்று சுவாமிகளை வணங்கிப் புதல்வரையுங் கண்டு பரிதாபிக்கச் சுவாமிகளும் தந்தையார் வரவுநோக்கிப் புதல்வரையழைத்து முன்னைவினையறிந்து அப்பனே. உனக்குஞானமானது இல்லறத்திலிருந்ததற்பின் கிட்டுமெனவருளி இவருக்கு ஞானியென்ற பெயரா லின்றுமுதலிட்டு வழங்குகவென்று தந்தையாரையும் புதல்வரையும் விடைகொடுத்தனுப்ப விடைபெற்றுக்கொண்டு—இவர்கள் தம்மூரையடைந்தார்கள் அன்றுமுதல் புதல்வரை ஞானியென்று சகலருமழைக்கலாயினர்,

4. இவ்வாறாக. தாய்தந்தையர்களுக்கிணங்கி, ஞானியார் புராதன நகரமாகிய களந்தையென்னுங் களக்காட்டில் ஞானபூரணியாகிய இருளகற்றி அம்மையாரென்னும் மாதுசிரோமணியை விவாகோத்சவம்செய்தனர். இவ்வாறுநிகழாநிற்க இவரிருந்த மணவறையிலிருந்தவாறே மறைந்துவிட்டனர். ஆங்கிருந்த பலருமனந்திகைத்து பலதிறப்படப் பேசத்தொடங்கினர்கள் இதனையுணர்ந்த தமக்கையாரானமுத்தம்மாள் வேண்டுகோளுக்கிரங்கி மீளவுந்தமது திருமேனியை வெளிப்படுத்தலாயினர் இதனைக்கண்டசகலரும் வியந்து பேரானந்த மடைந்தனர் பின்பு தம்பதிகள் முதலாயினோர் பட்டினமருதூர் வந்து சேர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும்போது.

ஞானியார் இதற்கு முன்னமே உலக வாழ்வு நிலை யன்றெனக்கருதினவராதலின் இதனை வெறுத்துத் தனியே நெட்டூருக்குவந்து தமக்கை வீட்டில் வசித்துக்கொண்டிருந்தார்—அது கண்ட பெற்றோர் இருளகற்றியம்மையாரையும் நெட்டூரிற் கொண்டுவந்து சேர்க்க ஞானியார் இனி உலக வாழ்க்கை பாரமென்றஞ்சி வீட்டைவிட்டு அவ்வூரிலுள்ள முச்சந்தியில் பனி வெயில் காற்று மழைகளைக் கவனியாது, ஏகாக்கிரசித்தராய் நிட்டை கூடியிருந்தார். அப்போது தேவர்களெல்லாங் கறையான்களாக வந்து புற்றாக வளர்ந்து ஞானியாரின் திருவுருவை மூடிவந்தனர்—மேற்கண்ட இருளகற்றியம்மையாரும் முத்தம்மையாரும் ஞானியார் திருமேனியில் பகலில் சூரியகிரணந் தாக்காது தம் முன்தானைகளால் மறைத்துவந்தனர்—இங்ஙனம் இரண்டரை வருடங்களானவாறே புற்றானது தமது திருவுருவ முழுவது மூடிவிடவும் மேற்கண்ட இரண்டு அம்மையாரும் விநாயகக் கடவுளை பக்தி பூர்வகமாகத் தியானித்து ஒருமண்டலவரை உபாசனை செய்து வந்தனர் :— அதற்கு அவ்விநாயகக்கடவுளும் அவர்களது பக்திக்கிரங்கி யவ்வூரின் முப்பிடாரியம்மனை ஞானியார்பால் விடுத்து இல்லறத்திருக்கும்படி ஆக்ஞாபிக்க அவ்வம்மனு மவ்வாக்ஞைக்கிணங்கியவ்வாறுரைப்ப ஞானியார் கவனியா தசைவின்றியிருக்க அதைத்தெரிந்த விநாயகக்கடவுள் தனது

துதிக்கையால் தபோநிதியாகிய ஞானியாரைப்புற்
றுடனெடுத்துச் சித்திர நதியிடை விடுத்தனர் ஆற்
றின்னீரினால் புற்றுமண் கரைந்து சீதளந்தோன்ற
ஞானியாரெழுந்து பசுமந்தைகள் கூடுமிடத்துள்ள
குத்துக்கல்லிடத்தே தோன்றினார் இதனை அம்மை
யாரிருவரு முப்பிடாரியம்மனாற்றெரிந்து ஆடை
யொன்றனுப்பி அம்மூர்த்தியாரை யாங்குள்ள யாவ
ருமாவலுடன் வரவு எதிர் பார்த்துக்கொண்டிருந்
தார்கள் ஞானியார் வீட்டிற் கேகி யாவருக்கும்
விபூதியளித்து வசித்திருந்தனர் வரவுணர்ந்த ஞானி
யாரின் தாயாரும் நெட்டூருக்கு வந்து ஞானியாரைப்
பார்த்து முன்னோர் முறைப்படி இல்லறத்திருக்க
வலிந்து வேண்டியது மல்லாமல் ஓர் இருப்பு வேலா
யுதத்தையும் வழங்கி பூசித்து வரும்படி மொழிந்
தனள் அதற்கவருமிணங்கி இல்லறத்திருந்து அந்
நெட்டூரில் வேலாயுதத்தை ஸ்தாபித்துப் பிச்சைய
ன்ன மேற்று நிவேதித்து வரும் அதிதிகளுக்கும்
அளித்து வந்தார் இவ்வாறாக ஏழுநாள் அவரது
பத்தினியாருடன் கூடியிருக்க அவ்வம்மையார் கர்ப்
பமாகி ஓர் பெண் மகவையளிக்கவும் மகவிற்கு
ஞானியார் தாயாரின் பேரிட்டு வழங்கிவந்தனர்
பின்னும் ஓர் பெண் மகவுதிக்க வம்மகவுக்கு என்னை
க்காத்த அம்மாள் எனநாமம்புனைந்தனர் இவர்க
ளுள் முதல்மகளை களக்காட்டில் விவாகஞ்செய்து
கொடுத்தார்கள்.

5. பின்னர் ஞானியார் தம்மனைவியாரைய ழைத்துச் சந்நியாசஞ் செய்து கொள்ளும்படிசெய்து யதாப்பிரகாரம்" சர்வதயாபரிபூரண பாதபங் கஜ—அநாதிபிக்ஷை ஏழையம்மா" யென்றுசொல்லி பிச்சையேற்று வேலாயுதத்திற்கு நிவேதித்து, வரும் அதிதிகளுக்குதவிச் சேஷித்த அன்னத்தை ப்புசித்து வரும்படி பணித்து இளையமகவைத் தமக்கை முத்தம்மையார் குமாரனுக்கு விவாவகஞ்செய்யும்படிக்கு உத்தரவு கொடுத்துத் துறவறத்திருந்து வந்தனர்,

6. அந்நாள் ஞானியார் தமது ஆசாரியரான குழந்தை முத்தானந்தசுவாமிகளின் பரிபூர்ண தசையைத் தெரிந்து மன்னார்கோவிற் கேகி அச்சுவாமிகளால் அப்பரானந்தர்" எனப்பெயர் புனையப்பெற்று குருபரிபூர்ண தசையைத் தெரிசித்து வேண்டும் சம்ஸ்காரங்களைப் பரக்க நடத்தினர் குருபரிபூர்ண காலம் கொல்லம் ஆண்டு தொள்ளாயிரத்துப் பத்தாம்வருடம் சித்திரைமீ பதினெட்டாந்தெதி குருவாரம் விசாக நட்சத்திரம்:— மேற்கண்ட குருவின் பாதரக்ஷைகளை நெட்டூருக்கெழுவித்து வேலாயுதத்தின் பக்கலில் ஸ்தாபித்து பூசித்து வந்தனர்.

7. பின் ஸ்ரீ அப்பரானந்த சுவாமிகள் ஒக்கநின்றான் பொற்றைக் கெழுந்தருளி தவமியற்று ஞான்று வடகரை ஜமீந்தார் வெள்ளைப்பாண்டிய

துரையவர்கள் ஈஸ்வராதீனமாகச் சந்தித்து சுவாமி களுக்கு வந்தனை வழிபாடுகளியற்றி அரண்மனைக் கெழுந்தருளப்பிரார்த்திக்க, வாக்களித்து நெட்டூருக்கு மீண்டெழுந்தருளினார்.

8. இவர்செய்த சித்திகளெல்லாம் பென்சன் போலீஸ் இன்ஸ்பெக்டர் மக-ா-ா-ஸ்ரீ B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்களியற்றிய நெட்டூர் ஸ்தலப்புராணம் சித்திச்சருக்கத்தில் பாக்கக் காணலாம்.

9. ஸ்ரீ அப்பாானந்த சுவாமிகள் தமது பரிபூரண தசையையுணர்ந்து வெள்ளைப்பாண்டிய துரை முதலான அன்பர்களுக்கு முன்னரே தெரிவித்து அழைத்து அவரவர்களுக்கு வேண்டிய வரங்களை அனுக்கிரகித்த ஆனிமீ குருவாரம் பூச நட்சத்திரத்தன்று பரிபூரணத்தில் இரண்டறக்கலந்து திருக்கோவில் கொண்டெழுந்தருளினார்

10. அப்பால் மேற்கண்ட வெள்ளைப்பாண்டியத்துரையவர்கள் முதலிய அன்பகளாற் சமாதி ஆலயம் நிர்மாணஞ்செய்து நித்திய நைவேத்திய பூஜா கைங்கரியங்கள் நடைபெற்று திருவிளையாடல்கள் நடைபெற்றுவரும் நாட்களின் பின்னர். யெனது பிதா மகரவர்களாகிய—சுந்தரலிங்கம்பிள்ளையவர்கள்—ஸ்ரீ அப்பாானந்தசுவாமிகளின் பரிபூரண கிருபாபாத்திரருமான ஸ்ரீமாந் சங்கரலிங்கம்பிள்ளையவர்கள், பேட்டை அருணாசலம்பிள்

ளையவர்கள் முதலான முக்கிய அன்பர்களாலும் மற்றுள்ள மெய்யன்பர்களாலும் அன்று தொடங்கி இற்றைஞான்றுவரை கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டப முதலிய திருப்பணிகளும் வேலாயுதமிருந்த கர்ப்பக்கிரகத்தில் ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுளை வள்ளிநாயகி தெய்வயானை நாயகி சமேதராகப் பிரதிஷ்டித்து அநேக உத்ஸவாதிகளும் நித்திய பூஜாபடித்தரங்களும் ஏற்படுத்தப்பெற்று ஸ்ரீ அப்பரானந்த குருநாதன் கிருபையால் பூரணமாக நடைபெற்று வருகின்றன.

11. அன்றுமுதலின்றுவரை ஸ்ரீ அப்பரானந்த சுவாமிகளின் பெண்சந்ததியின் வகையறுக்களே ஷை ஆலயபூசை நைவேத்திய சகல கைங்கரியங்களையும் பக்தி சிரத்தையுடன் நடத்தி வருகிறார்கள்.

12. இஃதன்றி ஸ்ரீ அப்பரானந்த சுவாமிகளை பக்தகோடிகளுக்கறிகுறியாக விக்கிரகரூபமாகத் திருவுருவ பிரதிட்டை செய்யப்பெற்று யாவருங் கொண்டாட உத்சவாதிகள் நிகழ்ந்து வருகின்றன.

ஓம் தத் ஸத்

| | | |
|---|---|---|
| இங்ஙனம்<br>1092-ம்௵<br>தை ௴ 13௳ | } | அடியார்க்கடியான்,<br>சு கி. ராமலிங்கம்,<br>நெட்டூர். |

# சிறப்புப்பாயிரம்

நெட்டூர் ஸ்தலபுராண மியற்றியவரும் இந்நூலாசிரியரின் மாணுக்கரும் தச்சநல்லூர் ரயிட்டர் பாலு நாயுடு அவர்களின் கனிஷ்ட புத்திரரும் சிந்துபூந்துறை வாசரும் பென்சன் போலீஸ் இன்ஸ்பெக்டருமான B. B. நாராயணசுவாமி நாயுடு இயற்றியது,

அகவற்பா

மலர்த்தலை நிலமின் னலர்திரு முகம்போல்
விலர்தலை யம்புதை சலதர மணிகொழித்
தெத்திசை யும்புகழ் சித்திர நதிவளை
உறுமறை யொலிமலி குறுமறை நாட்டில்
நிலவென வொளியெறி திலகம் போலவிர்
வட்டோ் வனமூலை மட்டேர் குழலியர்
நட்டோ் நடநவி னெட்டோ் வளர்ந்தோன்
கொள்ளுமுத் தானந்த வெள்ளந் தலைப்படர்
குழந்தைமுத் தானந்த விழைந்தகோ வுடையான்
கட்டுடைப் பாசம் விட்டவர் நட்டுறை
மட்டுடை நறும்பொழிற் பட்டண மருதூர்
இகழற வொழித்துத் திகழறம் வளர்த்த
புகழ்மக ராஜ நிகழ்புல வன்மனை
மதுரவல் லியின்வயின் சதுருட னுதித்தோன்

## சிறப்புப்பாயிரம்.

மருளகற் றியபார் வெருளற முருக்கிய
இருளகற் றியமின் றெருள்கடி கொண்டோன்
சேகரஞ் செய்துமா தூகரங் குயிற்றி
ஓதனம் வேற்குசி வேதனம் நிறைத்தோன்
கொன்னப் புற்றசொல் பன்னிய புலவன்
கன்னப்புற் றொழிய வின்னருள் புரிந்தோன்
செந்திநன் னகரிற் பந்தனைக் காப்பு
முந்திமுற் றிறந்து கந்தனைத் தரிசித்
தாயுளி னெல்லை யாயுள வதனை
யாயுள னமைத்த வாயுள்வீ றுடையோன்
நெட்டைவா யில்களை கட்டுளத் தடக்கி
நிட்டைவாய் நிறீஇய சிட்டவா சாரன்
சீர்தரு முறையுளி வேர்தரு செவ்வேள்
நேர்தரு சேவை பார்பெற வகுத்தோன்
அக்கர வம்புனை நக்க ரிருநா
லக்கர வம்புறு சக்கார் பத்தியில்
ஆழ்நா யன்மார் ஆழ்வா ராகியர்
கேழ்தீர் பலியில் மூழ்கா நின்றனர்
அன்னோ ருடனொப் பின்னோ நிலனில்
நன்னோ ருடன்றொழு மின்னோ ருருவுளோன்
புலவர்க ளிதயப் பொலன்சிறை வண்டார்
சுலவிய புராண விலகுகான் றுணரினர்
தமிழ்மொழி யாக விமிழ்தர நவிலத்
தமியன ளவிலரு ளமிழ்தினைச் சுரந்தோன்
இன்னமும் பலவா மன்னிய மகிமையை
என்னரும் புகழ நன்னரி லொழுக்கியோன்
மெய்ப்பரா னந்த வைப்பரா மந்த

# சிறப்புப்பாயிரம்.

அப்பூரா னந்தன் பொற்பத மலரில்
மெல்லியல் செங்கை நெல்லியங் கனியெனப்
பதிபசு பாச விதியினை யுணர்ந்தோன்
எற்றிய பவத்துயர்க் கிற்றக வூன்றி
முற்றிய வகந்தை பற்றறக் கடிந்தோன்
சமதம மாதிய வமரறு மணிகளை
பகட்டிர ணியவுளத் தகட்டிடை நிறைத்தோன்
எண்ணையி னெழுக்கெனக் கண்ணுதன் மலரடிப்
பண்ணிய தியான புண்ணிய சீலன்
என்றனைம் புலநலங் கான்றன சொன்றி
போன்றரு வருத்து நோன்றமா தவத்தோன்
கொக்கேய் நறும்பொழில் மிக்கார் மயநகர்
மிக்கேற் சித்தர் நெக்கருள் சுமந்தோன்
போக்கிய ஞேயன் யாக்குரு வண்டெனத்
தேக்கிய நலத்தேன் வாக்கடிக் கமலன்
இந்துதோய் மாடச் சிந்துபூந் துறைநகர்
சந்துதோய் வாச வந்துநுண் பலகணி
கூர்த்தியல் ஏகஞ்ஞ மூர்த்தியாச சிரமம்
விடாதுறை கின்ற மடாலய பதியாம்
நீத நாயக சாத நேயக
வேத நாயக போதசி காமணி
மாற்கட வெள்ளிபன் மேற்கட வுளருணப்
பாற்கட லமுதம் நாற்கட நிறைத்தென
மான்மணி மாலை காலையேத் தெடுப்ப
நான்மணி மாலை நூன்மிலைந் தன்றியும்
தோத்திர மாலையுஞ் சாத்தின னவைகளை

## சிறப்புப்பாயிரம்.

பாணர்பாண் மலிதரு நீணகர் வேந்தன்
சங்கையில் பவர்தீர் கங்கைகோத் திரத்தோன்
தத்துவ விசாரணை யுய்த்திடு மிதையன்
தனதனை நிகரிய கனதன விபவன்
கிருட்டின மாலி னருட்டவச் செல்வன்
உள்ளுவா ருள்ளத் துள்ளுறை யொருவன்
பத்தியிற் பழுத்த வித்தக விழுத்தகை
பத்துடை யடியர்பால் வைத்திடு மார்வன்
அகத்திய னிகர்கலா மகத்துவ நிபுணன்
சேடனை மானும் பீடுடை யறிஞன்
இராமனை நிகர்குண இராமலிங் கேந்திரன்
இச்சக மெச்ச அச்சியற் றினனே

---

இராமநாதபுரம் ஜில்லா ஆத்தங்குடி V. V. வித்யா சாலை தமிழாசிரியர் பிர்மஸ்ரீ M., சுப்பராமய்யரவர்கள் இயற்றியது,

அறுசீர்க் கழிநெடிலா சிரிய விருத்தம்

போதநா யகநெட்டே ரப்பரா னந்தனெனும் புனிதனூர்க்கேகம்
வேதநா யகனெல்லைச் சிந்துபூந் துறைவாழும் விமல னூர்த்த
பாதநா யகன்றமிழா னொன்மணிப்பா மாலையொன்று பகர்ந்தா
னிப்பூ
மீதநா யகமாஞே ரநாயகமா வாரோர்கால் விளம்பின்மாதோ

# சிறப்புப்பாயிரம்.

வேத்திரப்பா ணிப்பகவற் கருள்கூர்ந்த நெட்டேர்வாழ் விமலன்மீது, தோத்திரப்பா மாலையினை நான்மணிமாலையி னோடு கூட்டப்பெற்ற, காத்திரப்பா டறமெழுபான் மீதும் விடாமுயற்சியினாற் கடிந்து கூற்றை. காத்திரப்பா வென்றுரைத்த வேதநா யகன்பெருமை கழறற் பாற்றோ,

தலைவன்கோட்டை ஜமீன் ரிசீவரும்

தச்சநல்லூர் சித்தர்மான்மியம் நான்மணிமாலை

பிரபந்தங்களை இயற்றியவருமாகிய ஆற்றார்

மக-ா-ா-ஸ்ரீ A. T. இராமலிங்கம்பிள்ளை

அவர்கள் இயற்றியது,

மட்டேருங் குரவுகமழ் புயற்குருகி வாயார மகிழ்ந்துபாடி, யெட்டேர்சென் றிரந்தீட்டுந் திரவியக்கா வடியெடுத்து மியற்றற்கொண்ணா, நிட்டேத் தவமிளைத்து நியமநிலை முறைதவறு நிட்டர் வாழும், நெட்டெரென் றேரூருண் டதுமுடியா தூழி யொரு நீடலாலே.

திரிகூட வரைபிறந்து தென்காசிப் பதியடுக்குஞ் சிற்றா றெல்லாந், திரிகூட சங்கமளை தெரித்தோடத் திக்கனைத்துந் திரைக்கை வீசிப்--பொருமாதி னுறழுசித்தி ராநதியாங் கங்கையொரு புறத்தேமேவ, யரியாதி பிரமர்தொழ முருகனருட் கோயில் கொளுமவ்வூர் தன்னில்,

# சிறப்புப்பாயிரம்

எந்தைபிரான் திருவருளை யின்னபடி யென்றுணர்ந்தே யிருந்து சிட்டை, சந்தமுறச்சாதிக்கு மப்பரானந்தகுருசாமி தாளில். செந்தமிழால் நான்மணிமா மாலையெனு மோரலங்கல் செய்துசாத்தி. பந்தமறத் துய்ந்தவருட் பாவலவ னியாவ னெனிற் பகரக்கேண்மோ.

இச்சையறத் தன்பர்குழா மீடேறப் பூரணத்தோ டினிது மேவும். தச்சைமிக்கேல்மாமுனிவன் சந்தானபரம்பரையே தழைக்கவந்தோன், பச்சிலையே னுமிடுவோர்க் கருள்சுரக்கும் பரனடியே பன்னிப்பன்னி மெச்சிமொல் வேதநா யகசாமிக் குரவனென விளம்புவாரே.

மேலப்பாவூர் பென்சன் ஹெட்கன்ஸ்டேபில்
வித்துவான் மக-ா-ா-ஸ்ரீ கோபாலநாயுடு அவர்க
ளியற்றியது.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

சாதுசங் கத்தை வளர்க்குந்தாய் போல்வான்
தத்துவ ஞானமே யுடையான்
நீதிசேர் சிந்துபூந் துறைமடா லயத்தை
நிருமித்தோன் வேதநா யகப்பேர்
போதக னெட்டே ரப்பா னந்தன்
பொலனுறு பாதபங் கயத்துச்
சாதக மாக நான்மணி மாலைச்
சாத்தினன் சகங்கொண்டா டிடவே.

# சிறப்புப்பாயிரம்.

இராமநாதபுரம்ஜில்லா திருச்சுழிந்தாலுகா
இராமேஸ்வரம் தேவஸ்தானம் கூத்திபாறை
தமிழ்ப்பண்டிதர் மக-ஈ-ஈ-ஸ்ரீ மதுரகவி முத்து
கிருஷ்ண ராமானுஜதாசரியற்றியது.

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

தூவளைகள் குமுறுகடற் றுறைமுகமந் திரநகரி தூன்றி
ஞாங்கர், மேவியபட் டினமருதூர் வியத்தகுநற் றலத்துதித்து
வெய்ய தாபம். மூவகைய பகைதடிந்த முழுஞான வாட்குழ
ந்தை முத்தானந்தத். தாவதன்பொன் னடித்துணைத்தா மரை
மலர்த்தேய் வாய்மடுத்துத் கலைமேற் கொண்டோன்.

கோரகன கஞ் செங்கழுநீர் குவளைவிரைத் தானுசந்தங்
குங்குமங்கள், ஆகவிவை மலிந்துசெறிந் தகழிபுடை யுடுத்த
மணியம்பொன்மாடம். மாகமிசை யிந்திரவில் வளைபரிதி வான
வன்போல் வயங்கித் தோன்றும். போகநலம் பெருகுனெட்டே
ரப்பரா னந்தனடிப் புனைதல் செய்தான்.

சீரிபகூ ரியமதுரச் செந்தமிழ்நூற் றுறைப்படிந்து
தெளிவு சான்ற. நேரினிய புலவர்சிந்தை ஞிமிற்றினங்கள்
சூழ்ந்துமொய்ப்ப நிகழ்த்து நாற்சொல். வேரிமலர் தெரித்
தெடுத்து விழுத்தகவின் சுவையொழுகு வியப்பு வீற
நாரினிது கொடுதூய நான்மணிதோத் திரமாலை நயந்து யாத்து

மேவியசீர் மயனகரி மிக்கேற்சித் தன்பொலந்தாண்
மெல்லென் றேட்டுப். பூவினிழ லொதுங்கிமும்மைப் பொரு
ள்வினவி முண்டனமும் புரிந்து செய்ய, காவிபுனை துகில்
வேடங் கலந்தொழுகி யுண்மைநிலை கையினெல்லித், தேவி
னிய கனியென்னத் தெளிந்துசிவ வனுபூதிச் செல்வம் பெற்
றேன்,

# சிறப்புப்பாயிரம்.

பிணிதுன்றி நலிகின்ற பீழையினை யறக்கடியும் பெற்றித் தக்க மணிமந்திர வௌடதங்கள் வடித்தியக்கி யுலகுயிரை வசித்து வல்லே, திணிகொண்ட பிறவிவெந்நோய்த் திமிரமிரிந் தோட்டடுப்பச செல்வச்சீக்கும், துணிகின்ற திட ஞானந்தோற்றுத்துய்ந் நெறியொழுக்குஞ் சுபாகசீலன்;

மாறுபடு பலசமய வாதிகளை முன்காணுன் மணிப்பூட் பொற்கால், தேறுபடு மெய்யறிவுச் சீரியரைப் பின்காணுன் தெரிக்குமென்ற, வீறுபெறு சமதமமேல் விடல்சகித்தல் சமாதான மிகுசிரத்தை, ஆறுமூறு முறையுள்பொழி யருட் கொண்மூ விவனெனக்கொண் டாடியேத்த,

சலஞ்சலங்க ளாயிரஞ்சூழ் சங்கபஞ்ச சன்னியம்போற் சனபதங்கள், துலங்கியன புடையுடுத்த தூவழுதி வளநாட்டித்த சூழும்செம்பா, றலங்கலென விலங்குசிந்து பூந்துறைத்தெக் கணமூர்த்தியாலயத்தே, நலங்குலவு வதிகரித்தோ னவில்வேதநாயகநற் றவசீமானே,

சிறப்புப்பாயிரம்முற்றிற்று.

# சத்குருகடாக்ஷம்.

## நெட்டூர் அப்பரானந்தர் நான்மணிமாலை

காப்பு

வெண்பா

ஆன்மணிசேர் நெட்டூர்க்கோ னப்பரா னந்தன்மேல்
நான்மணிமா லைப்பா நவிலவிளங்—கூன்மதிகொள்
அத்திமுக னம்மை யருள்குரவன் பாதமலர்
பத்தியுடன் றாழ்வேன் பரிந்து

நூல்

வெண்பா.

மணியார்நெட் டூரப்ப ரானந்தன் மாட்சிப்
பணியார் திருத்தளியைப் பற்றிப்—பணிபுரியின்
இந்திரனுள் ளிட்டார்க்கு மெட்டா வெழிற்பேறு
வந்துதவு நெஞ்சே மகிழ்ந்து. (1)

கலித்துறை.

மகிழத் தகுமப்ப ரானந்தன் பொன்னடி வாழ்த்திநெஞ்சே
இகழத் தகுமுல காதிய போகத்தி லிச்சையினைப்
புகழத் தகுமவன் பொற்பார் புராணம் பொருந்தவிங்ஙன்
நிகழத் தகுமிச்சை கொண்டா லுனக்கு நிகரிலையே. (2)

## அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

நிகரரு நெட்டே ரப்ப ரானந்த முனிவ னின்பாற்
புகரறக் கலக்க வெண்ணிப் புகுந்திடின் மனமோ வன்றூள்
பகர்ந்தெனைப் பவத்தி லீர்த்துப் படுத்துத றகுமோ வீந்த
அகந்தனை யடக்கு கண்டா யண்ணலே யடிக ளேறே. (3)

## அகவல்.

ஏரார் தவத்தோர் சீரா ரருணிலை
பேரா திருநிதி யோரா துலகினைப்
பாரா திமையாப் பார்வைநோக் காக
வனமலை முழையின் மத்தியில் வைகிப்
பனிவெயில் காற்றூ னணியுடல் வாடிப்
பச்சிலை யாதிக ளிச்சையற் றருந்திப்
பலகால் வருந்தி யிலகா நந்தப்
பேற்றையுற் றூர்சீர் சாற்றுத னோக்கா
துற்றனை மனனே பெற்றதாய் தந்தை
பெண்டுபிள் ளைகளோ டெண்டரு மொக்கல்
துணையென நம்பி யிணைபிரி யாதே
கூடியு மலைந்தும் வாடியுந் திரவிய
வாசைகூர்ந் தந்தோ வேசைபோற் றொழில்செய்
திற்றைநாள் வரையும் பெற்றதை யுணரா
யிருப்பது பிழையரு வருப்பினை யடையா
தறத்தினை மறந்து பிறத்தலே தொழிலாய்
மூவுல கத்துந் தாவியே சுழன்றூ
யுன்னுடன் சேர்ந்த வென்னையும் வருத்தி
யருந்துய ருறச்செய் திருந்ததை யாய்ந்தே
யிருவரு மயறீர்ந் தருள்பெறக் கருதிச்
சூழல்செய் தறையும் வாழிநா லுரையைத்

தாழ்விலா தூஞற்றில் வாழலா நம்பி
யார்வ மிகுத்தே யோர்வது தகுநீ
மேதகு சில மாதவர் வருந்திப்
பெற்றுமே றுதலாந் தெற்றெனக் கேண்மோ
கொந்தவிழ் மலர்ப்பூ நந்தன வனஞ்சூழ்
நிட்டைமா புரியா நெட்டேர் நகரில்
அருந்தவக் குரவ னப்பரா னந்த
மாதவன் கமலப் போதினி ஞளும்
பத்தி விராகஞ் சத்திய மாக்கொண்
டத்தனே நீயே மெய்த்துணே யாமென்
றூசைப் பெருக்காற் பூசைசெய் தாற்றி
மூக்கர ணங்களு மொக்கவே யூக்கி
ஓர்கருத் தாகப் பார்கருத் தின்றி
அல்லும் பகலுஞ் சொல்லிய முறையே
பேணிநாம் பயின்று நாணிலா துதிசெய்
தாடியும் புகழ்கள் பாடியும் பணிந்துந்
திடம்பெற நிற்கி லடர்ந்துவெவ் வினைகள்
வெந்திட வருட்டிறம் வந்திடுந் திண்ணம்
ஏழை மனமே கோழை படாமல்
நம்பியா தரிக்கி னும்பரு மறிதற்
கரியசிற் சுகச்சீர்க் குரியராய் வாழ்வோம்
பகர்வுறி னுலகி னிகர்நமக் காரே (4)

வெண்பா

ஆர்வமிகுத் துன்பா லனவரத மன்பியற்றப்
பூர்வமதி போன்றெனக்கோர் புத்திநல—நேருதற்குச்
செய்வாய் திருநெட்டேர்ச் சித்தா வுனக்கபயம்
ஐயா தெரித்தேன் அறி (5)

## கலித்துறை

அறியுந் தரஞ்சற்று மில்லேனென் புல்லறி வாலொருநீ
குறியுங் குணமுமி லாதுநின் றுயிலை கூறுதற்கோர்
நெறியுந் தெரிகிலன் நெட்டேர்க் கிறைவவென் நெஞ்சமுன்பாற்
செறியும் வகையை யுணர்த்தாய் பரகுரு தேசிகனே (6)

## அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

தேசிகா நெட்டே ரப்ப ரானந்த சிவமே தீயேன்
தோஷியா னாலு முன்பாற் றொக்குடலாதி யீந்த
வாசியால் வழக்கெற் குண்டு வன்மைசெய் யற்கசெய்யின்
தூஷியா நிற்பர் கண்டாய் துரியவாழ் வீத னன்றே (7)

## அகவல்

நன்றே புரியும் வென்றிகொள் மாந்தரும்
வேதசி வாகம மோதுவார் கூட்டமுஞ்
சரியைக் காகிய சாதன முயன்றுஞ்
கிரியையைப் பற்றிக் கிருத்திய மொழுக்கியும்
அரிய யோகம் பயின்றுமே லகலாத்
துரிய ஞானப் பெரியவர் தொகுதியும்
ஆதுலர்த் தேடி யீதலே கருதுஞ்
செல்வ மிகுத்தவர் திரள்களுஞ் செறிந்து
வாவி கூப மடுக்கள்சூழ்ந் திலகும்
நிட்டைமா நகரோ பெட்டிரண் டறிந்த
வித்தகா தமியேன் விளம்புவல் கேண்மோ
எண்ணில்பல் பிறவி நண்ணிய காரண
முணர்த்தியஞ் ஞான குணத்தினை யகற்றிப்
பத்தியிற் பழுத்த முத்தர்பா லெய்திப்
பணிபுரிந் தார்க்கு மணியுறும் பதவிப்

பேற்றினை யளித்தாள் போற்றுவன் பெரிதும்
நின்பெருஞ் சீர்சா லின்பநன் புகழே (8)

வெண்பா

நன்மைதிகழ் நெட்டூர் நாயகமே நீமறுக்குந்
தன்மை யழகோ தமியேனைப் புன்மயனென்
றெண்ணா திருமையினா மேமாற்றா துன்பணிக்கே
பண்ணாக்கி யாண்டருளப் பார் (9)

கலித்துறை

பார்க்கு ளுனக்கு நிகரான தெய்வமும் பக்தியிலா
தோர்க்கு ளெனக்கு நிகரான பாவியு மில்லையுய்த்துப்
பார்க்கி லெனக்கருள் செய்குவ தோநலம் பாலனெனை
யார்க்கும் படிக்கருள் செய்வாய்நெட் ரேப்ப ரானந்தனே (10)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

ஆநந்தப் பெருங்கடலே யரசே யப்ப
ராநந்த மூர்த்தியுனை யறிய வுண்மை
ஞானந்த னைப்பகர்தல் வேண்டு மிந்த
ஞாலத்தின் வாழ்வைநம்பி நலிந்த விந்த
வீனன்ற னைப்புரத்தற் கேலா தென்றி
எனையொப்பா ருனைக்கலந்த திலையோ வுண்டேல்
நானந்தப் பதவியுற்றாற் குறைவ துண்டோ
ஞானபரி பூரணனே நவில்வாய் நீயே (11)

அகவல்

வாய்மையும் மாண்புந் தூய்மையும் பொறையுந்
தாயக மாக்கொ ணேயவந் தணர்கள்

மறைமுழக் கொலியும் மகிழ்விழா வொலியும்
அன்பர்க ளார்க்கு மரகர வொலியும்
தண்ணுமை குழலியாழ் பண்ணமை யொலியும்
கும்பலாய்க் கூடி யும்பர்கா டெய்த
வானவர் தானவர் மண்மிசை யிழிந்தாங்
இருதிறத் தன்னே ரிருதிதி கைக்கொண்
டொருமன மாகி யுவந்துள் ளுருகிக்
கூடிக் குலாவிப் பாடிப் பரவி
வரம்பல பெற்றந் தரங்கமா யுறச்செய்
கெட்டேர்ப் பதியி லட்டமா சித்திரை
கட்டியே நிற்ப விட்டிலாப் பக்தியாய்
ஏவல்கொள் சித்தர்க ளாவல்கொண் டேத்த
ஆநந்த நல்கப்ப ரானந்தன் பொன்னடித்
தேனுந்து மலர்ப்பாற் சிந்தைவைத் தொளிரும்
அடியவ ரடியின் பொடிமுடி சூடிப்
படிமிசை நெஞ்சே கடிதினிற் கிடக்கின்
அருந்துயர் நீங்கிப் பொருந்துயர் வெய்தி
இணையிலாத் திருவடிப் பணிபெற லாமெனப்
பல்கா லோதியு மொல்கா திருந்தனை
கன்மனத் தோருங் கரைந்துநெக் குருகென்
தன்மைகண் டந்தோ சலியா திருப்பின்
யமன்வரும் வேளை யென்னைநீ செய்வாய்
தமனென நம்பிய தமர்தடுப் பாரோ
அலதுதான்
பெண்டுபிள் ளைகளுஞ் சண்டனை யெதிர்க்கக்
கூடுமோ கூறாய் நாடிழந் திடவும்
மாடிழந் திடவும் வருவதன் முன்னர்த்
திமிரநி வர்த்தினி யமிர்தநா யகனைத்

தினமொரு காலா கினுகினேந் துருகித்
திரிகர ணங்களொத் தொருமுக மாகி
உடல்பொரு ளாவி யுவப்புட னல்கி
முண்டெழு முடல்வா வுயிர்பொரு ளுவற்றின்
அவாவற் றருணிலை யவாவுட னுடுக
தவாப்பே றடைதிநீ சத்திய மீதே (12)

வெண்பா

தேவரெலா மேற்றுஞ்சீர்த் தேவப்ப ராணந்தா
வாவலெனக் கொன்றுள தஃ—தாராய்ந்தே யோவலிலா
முத்திப்பே றெய்தநினை முன்னுமன்பர் தாட்கமலஞ்
சித்திப்ப தற்குவகை செய் (13)

கலித்துறை

செய்யுந் தவஞ்செயற் கித்தேகஞ் சண்டி சிதைந்துமணம்
பொய்யி லமிழ்ந்து புலன்வாயிற்—சிக்கிப் புலமழுங்கி
நைவதன் முன்ன ருனது பதாம்புய நாட்டமுற்றே
யுய்யும் படிக்கருள் செய்வாய்செட் டேரமருத்தமனே (14)

எண்சீர்க்கழி நெடிலா சிரியவிருத்தம்

உத்தமர்க்குத் தாய்தந்தை சற்குருவு மாதி
உயர்ஞானப் பிரியருக்குச் சத்துபதே சித்தி
சத்தியசங் கற்பம்வாய்ந் தொழுகுமன்பர் தம்மை
சமுசார பயத்தினின் றுந் தடுத்தாண்டு கோடி
பெத்ததிசை யுற்றவர்க்குச் சித்திகளீந் தருடி
பிரியமுடன் றனிநிஷ்டை நகரியின்க ணமர்ந்தே
எத்திசையுங் கீர்த்திபெற்ற வப்பரா னந்த
வீசவெனக் குன்பணியி லிசைக்கும்வகை புரியே (15)

## அகவல்

புரிதவழ் மருதஞ் சூழ்ந்திடு பொலிவும்
வரியினை மரற்று மல்லிகை முதலவும்
பூங்குயி லுலவும் பொற்புறு பற்பல
கோங்குமா நாங்கா லோங்குமா காக்களும்
புண்ணிய போகம் புசிப்பதற் கேணிபோல்
விண்ணள வளாவிய விலங்கலுஞ் சூழ்ந்த
அரியரி யயனு மதிசயித் தார்க்குங்
கரிபரி தேரூர் காவண மமைந்த
அறப்பெருஞ் சாலையுள் ளசவண வீதியும்
சிறப்புக ளின்னுஞ் சீர்பெற வுலவும்
நிட்டைமா நகராம் நிகரறு நெட்டேர்
அஷ்டைஸ் வரியமு மமைந்துள புரியைத்
தானமாக் கொண்ட தன்மைபோ லரிய
வானநா டருமற் றேனரு மேத்தும்
பட்டண மருதூர்ப் பதியினி லுதித்த
இட்டமார் மகரா சேந்திர னுயிர்த்துணை
மதுரவல் லித்தாய் வயிற்றிடைத் தோன்றி
முதுமொழிக் காவிய மூதறி வாளர்போல்
புலவரோத் ததிவிதப் புலவராஞ் சோதரர்
நலமலி சங்க நமர்களைத் துறந்த
தென்னே கருதி யியம்புக வதுபோற்
றன்னே ரில்லாச் சாமியே நாயேன்
புன்றகு சங்கமும் பூரியர் தொழில்களும்
நன்றெனக் கருதி நாணமொன் றின்றி
அலைந்திட றகுமோ வந்தோ வபயம்
மலைந்திடா வகைநீ மகிழ்ந்தருள் புரிவாய்

அலதுநின் குரவ னருளிய செஞ்சொற்
பலமதை யுணர்த்திப் பாதுகாத் திடற்கு
நின்னது கருணைப் பின்ன மிலாதே
என்னிடத் ததிப்பிற் பொன்னகர் வாழ்வும்
பதமுறு பேறும் படியுறு போகமுங்
கைத்துண் னடியார் கனைகழற் பத்தி
வைத்திறு மாக்கும் வாழ்வையு மடைந்து
கதிர்முன் னிமம்போற் கன்மசஞ் சிதங்கள்
விதிர்விதிர்த் தோடி விதிக்குதிக் ககல
என்னையான் மறந்தே யுன்னை வந்தணைய
அன்னையைச் சேய்சேர்ந் தார்த்தென வருளே (16)

வெண்பா

அருளார்ந்த பேரின்ப வார்கலியி லாழப்
பொருளார்ந்த மாமொழியைப் போதிக் கிருளார்ந்த
மும்பாமுந் தாண்டி முதன்மைபெற்றோய் நெட்டேரி
லெப்பாமுந் தீர்த்தகுரு வே (17)

கலித்துறை

குருவே யினிய குழந்தைமுத் தானந்தக் கோவருட்காந்
தருவே திருத்தொண் டியற்றும்வன் றொண்டர் தமதுளத்தாம்
உருவே யமரை நிகரோங்கு தூயநெட் டேரப்பனே
கருவேலை நீந்தற்குன் றாட்புணை யீதல் கடனுனக்கே (18)

எழுசீர்க்கழி நெடிலா சிரியவிருத்தம்

கடந்துள ஜனனங் கணக்கிலை யதனைக்
  கடைபுக வாக்கநீ கருதி
அடைந்தென தகத்தே யிருக்குமெய்ப் பற்று

மகற்றிநின் பற்றையான் றுணையாத்
தொடர்ந்தனு தினமுஞ் சோர்வுறா திருக்கச்
சூட்டுவாய் நிஷ்டைமா நகரை
யிடந்தனக் காக்கிக் கொண்டாற் றவத்தோ
யெழிலப்ப ரானந்த விறையே (19)

அகவல்

இறைமுயன் றாக்க வியமன் றடைக்க
முறைமுறை கன்மம் மொய்த்திட வருந்தித்
துறையறி யாதே சுழன்றனை யந்தோ
நரைதிரை யெய்தி நலிந்திடுந் தருணம்
அலமந் தலறி நலமொன் றின்றிக்
குலமுங் குறியுங் குணமுங் குறைந்து
பிணமென் றொருபேர் பிறகுமு னந்தக்
கணந்துணை யாகுங் கருத்தினை யாயா
தாண்டாண் டுடொறும் வீண்டொழில் பூண்டு
மாண்டனை பெரியா ராண்டுனைக் கோதித்
தடுத்துப் பகர்ந்த தகவுரை மறந்தே
யடுத்தெனைக் கெடுத்தா யடர்வினை நெஞ்சே
நின்னது புன்மையை யென்னைபென் றுரைக்கேன்
அன்னதைச் சிறிதிங் கறைகுவல் கேண்மோ
மாதரார் முகத்தை மதியெனத் துதித்துங்
காதலாங் கண்ணைக் காவியென் றுரைத்தும்
மூக்கினைக் கிள்ளை மூக்கெனச் செப்பியும்
வாக்கினைக் குயிலிசை வனப்பென மகிழ்ந்தும்
பல்லை யரும்பர் முல்லையென் றோதியும்
முல்லையங் குழலை முகிலென மொழிந்தும்
கழுத்தினைக் கன்னிக் கமுகெனக் கழறியும்

வழுத்துங் கரத்தினை வாரிச மென்றும்
முலையைக் கோங்கு முகிழென மொழிந்தும்
இலையெனு மிடைநூ லிழையென வியம்பியும்
சிலையோ விவளெனச் சிந்தையு ளெண்ணிக்
கலையை நெகிழ்த்ததுக் கடிதட நோக்கி
அரவ மஃதென வாயா தவாவித்
திரமுடன் புல்கி யுரமதை யிழந்து
மூழ்கினை பாழா மாழ்குழி யதனில்
ஏழமை மனனே யூழுறக் கேண்மோ
அன்னவர் யாக்கை தன்னுடை யிழிவைப்
பன்னுறுங் காலைப் புன்னகை யாமே
கோழையுஞ் சளியுங் குரம்பியு நாற்றப்
பீளையு முகரும் பில்குவாய்த் துருத்தி
கெழுமிய கிருமிகள் கிண்டு மலப்பை
ஒன்பது பீற்ற லுலர்ந்திடு சட்டை
என்பது கருதா யென்னே யவரைப்
பார்க்கவுந் தகுமோ பணிகளி னுடைகளின்
சேர்க்கையை நீக்கித் தெளிந்துநீ பார்க்குதி
அன்னவர் பக்க லுளதரு வருப்பே
பாகுட னடியார் பாதமே கதியெனக்
கூடியன் னவர்பாற் குறிகுண மாயா
தாடியும் பாடியு மாற்றியுந் துதித்தும்
வாத குதர்க்க வழூஉக்களை யகற்றிச்
சாதனை நான்குஞ் சகசமாய் தழுவிமேற்
சாதன மடைந்து சதுர்பெற நிலவி
வேதவே தாந்த விழுப்பொருள் விளக்க
மோதி யுணர்ந்திடு மொப்பிலன் பாளர்சூழ்
வீதிக ணிறைநிறை மிளிர்கொடி யுலவும்

மாடமா ளிகைமிக வளங்களார்ந் தோங்கும்
ஆடக நகர்மிக ராகுநெட் டேர்க்கிறை
யற்புதா னந்த வருட்பெருஞ் சோதிதன்
நற்பதப் புணையையே நம்பியெஞ் ஞான்றுந்
தப்பறப் பரவியாஞ் சாதனம் புரியின்
சுப்பிர காச சுத்தசை தன்யமாய்க்
கைக்குணின் றிலகுங் கனியென விளங்கிப்
பொய்க்குணின் றன்னைப் புனித னாக்கி
நற்றவப் பேற்றை ஞயம்பெற வருளிக்
குற்றமின் ஞானக் குருவா குவரே (20)

வெண்பா

குருவழிபா டின்றிக் குறித்தநெறி கூடல்
ஒருவழியி னுலுமின்றென் றோவிட் டருமறைகள்
கூறுதலான் வேறுமுண்டோ கோதிலப்ப ரானந்தா
தேறுதற்கோர் வார்த்தையுரை செய்

கலித்துறை

செய்யா தொழித்திடி னுய்யும் வகையிலை திண்ணமதே
ஐயாறு மாறு முணர்ந்த மகத்துக்க ளையமின்றிப்
பொய்யா துரைக்கு மொழியறி யாதவிப் புன்மையனை
எய்யாது காத்தருள் செய்வாய் நெட் டேர்ப்பதி யீசரனே (22)

எண்சீர்க்கழி நெடிலா சிரியவிருத்தம்

ஈசரனென் றுண்டென்னல் சத்தியமே யாகு
மிறைவனருட் கோலங்கள் பிரத்தியக்க மாகப்
பூசுரரு மற்றையரும் வியக்குதல்செய் தின்னும்
புலமைகளை யுன்னிடத்துப் பொருந்துவதை யுணர்ந்தே
பேசுகிற மகிமையுறு பெற்றியரு மியானும்

பிரபலமாந் தெய்வநீ யாவாயென் றோதக்
கூசுவமோ வகமகிழ்வோ மெழிற்பொழில்சூழ் நெட்டேர்க்
கோமானே யப்பரா னந்தகுரு சிவமே (23)

அகவல்

சிவஞ்சேர் நெட்டேர்ச் சிவபெரு மானே
தவராஜ மாகவி புவிராஜ ரேத்துஞ்
சிவராஜ யோகச் சீர்மலி வாழ்வே
நவநவ மாக நயக்கு மெய்யன்பர்க்
கந்தகன் வரவுக் கஞ்சலென் றபயந்
தந்திடுந் தகைமைத் தயாநிதிப் பெரும
சுந்தரர்க் காகத் தூதுசென் றுன் மகன்
செந்திற் றிறைவனைச் சேவைசெய் தாங்குத்
திருக்கபா டத்தைத் திறக்கவு மடைக்கவும்
தருக்கினு லுஞற்றினே தன்மைதேர் காவலன்
ஆர்த்திட வருளினே யன்பிலா வம்பனை
ஈர்த்தே திருப்பி னேசுமோ வுலகம்
ஆயினு மிகழா தகளங்க சித்தவோ
தாயினு மினிய தந்தையு மாகவெண்
ணேயமொன் றென்வெரி சின்வயி னுந்தலால்
சேயனைக் காத்தருள் செய்த னின் பரமே (24)

வெண்பா

பரமெனவே புன்னைப் பலகாற் றுதிக்குந்
தரமெனக்குத் தந்தருளுந் தன்மை—யுரமாக
நம்பினேன் புன்பிறவி நண்ணுவனோ நெட்டேர்வாழ்
உம்பர்கோ மானே யுரை (25)

## கலித்துறை

உரையு மிரையு மகன்றோ ரருணிலை யுன்னியுண்டாந்
திரையுங் கடந்து நவநான்குக் கப்புறஞ் சென்றொளிருங்
கரையும் பிடித்திரு கண்மூடி நின்றுழி கற்பமிறை
யரையென் றியம்பும் பயன்றரு வாயப்ப ரானந்தனே (26)

## எண்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்

அற்புதமா மிந்நாம மாரிடையே பெற்றாய்
அதையணிந்தோ னின்னினுமே மிக்கானு மாமே
செற்புதைமா கமுகோங்கு வளங்கள்பல சிறந்த
திருநெட்டூர்ப் பதியமர்ந்த தேவமக தேவா
சொற்பதங்கள் கடந்துநின்ற நீயுமெனக் காகத்
துணையுதவிப் பதமலர்கள் சூட்டுவையே யாயின்
முற்பவங்க ளகன்றினியான் பிறப்பிறப்பைக் கடந்து
முத்தர்பதப் பணிவிடைக்கு முதன்மை பெறுவேனே (27)

## அகவல்

பெறுதற் கரிய பிறப்பினைப் பெற்று
மறிதற் கரிய வநிதியை யுறுதற்க்
கேவலவுணரா தென்னே யென்னே
ஏலவார் குழலா ரின்பமே பெரிதென்
றுழன்றது மன்றி யுறவு பகைகளிற்
சுழன்றுகா மாதித் துயர்க்கடன் மூழ்கித்
தளர்ந்தனை யந்தோ சந்தத முன்பாற்
கிளர்ந்ததை மறந்த கேடனு மாகிப்
படுகுழி யாம்பவப் பாவையி லாழ்ந்தே
யடுதெறு காலனுக் கஞ்சிலை மென்மேற்

செய்ததே செய்து தின்பதே தின்று
பொய்தவ ருமம்பல போகங்க டெய்த்தே
வெறிதே யலைந்தாய் வெறியவென் னெஞ்சே
அறிவரு மெய்ந்நிலை யடையுறக் கிடைத்த
இப்பிறப் பையுமிழந் தேமாந் திருப்பது
தப்பிதஞ் சொன்னேன் தப்பிதஞ் சொன்னேன்
சத்திய ஞானந் தவம்வலி யூகம்
புத்திக ளுணர்த்தும் புண்ணியர் குழாத்தைப்
பெற்றவர்க் காட்படப் பிறப்பறு மதனினும்
தெற்றெனை நம்பித் திடம்பெறற் காமோர்
உத்தியுண் டாகு முபாய முண்டெனக் கதால்
எத்திறத் தவரு மேத்திடும் புலவனாங்
கடிகைமுத் தெனும்பேர்க் கவிராஜ சிங்கம்
மிடிதவிர்த் தாண்ட வித்தக குருவாம்
அப்பரா னந்த வடிகளுக் கடியவர்
செப்பிய வேவ றோர்ந்திறை யாவது
தினந்தினம் புரியின் சித்தமுந் தெளிந்து
மனம்பதைப் பின்றி வாழ்குதும் வாய்மையே (28)

வெண்பா

மைவிழியார் கள்ள மருவுமனஞ் சொல்வதுபோற்
பொய்மொழியா னேதல் பொருத்தமோ மெய்மொழி
ஏமாற்ற மின்றி யெடுத்தனையே நெட்டேரிற்
பூமானே நீயே புகல் (29)

கலித்துறை

புகலும் பயனு முபாயமு நீயெனப் புந்தியையேன்
பகலு மிரவும் விடயாந் தரங்களிற் பாவிமன

மிகவுவ தாயி னுனைக்கூட லெவ்வித மேற்றிசைப்பாய்
சகலமு மாக்கிப் புரக்குநெட் டேர்ப்பதிச் சங்கரனே (30)

அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

சங்குசக் கரத்தோன் றுதா சகலரு மேத்த வல்ல
புங்கவ நெட்டே ரப்ப ரானந்தப் புனிதன் வாழி
பங்கமுண் டாக்கு மாயைப் பாலுழன் றலைந்த வென்னை
மங்கல ளுக்கி யாண்ட மகிமையு வாழிதானே (31)

அகவல்

நேசஞ் சிறிது நிறுத்தலில் வாழ்விற்
பாசம்வைத் தளவில் பவச்சுமை யேற்றி
நீசனு யுற்ற நிலையொழிந் தகண்ட
ஈசனை வழிபட் டிப்பிறப் பினிலே
அவத்தினி லலையா தைவா யடக்கித்
தவத்தினுக் கிசைந்த சாதன மெய்தி
அல்லொடு பகலிலா வருணிலை யுறவது
தொல்லறி வாளர் துணிபெனத் தெளிவாய்
வாணு ளெல்லாம் வயிற்றினுக் குழைத்தே
வீணுட் கழித்த வினைமலி நெஞ்சே
சொன்னமுஞ் சுதருந் துணைவியுந் துணையா
முன்னரு மில்லைப் பின்னரு மில்லை
இன்னம ரின்னு ளெய்திய தவ்வா
றுகுமென் றுய்ந்தே யவாவறுத் திவ்வுட
லேகுமுன் னேக னிணையடித் தொழும்பர்
தொண்டர்பாற் சென்று தொண்டுபூண் டொழுகிக்
குயிலுஞ் சுகமுங் குரலெழ வார்த்தே

அயிலும் பலங்களுண் டாம்பல தருக்களும்
அயினேர் விழியா ராடவர் பண்கள்
பயிலூ மரங்குகள் பற்பல வொளிரும்
வீதிகளமைந்து வியன்பெற விளங்கிக்
கோதிலா தோங்கும் கோபுர மமைந்த
அருள்வளர் நெட்டே ரப்பரா னந்தர்
திருத்தளி யதனைச் சென்றுசூழ் வந்தென்
அப்பா வையா வற்புதா நந்தா
இப்பவந் தொலைத்தருள் ளீசா வெனவே
கூவி யரற்றிக் கும்பிட் டிறைஞ்சி
ஆவியும் பொருளு மாக்கையு மவன்பால்
ஈந்திட் டானு யேகாந்த மாய்ப்பர
சாந்தம்வந் தெய்திச் சதாவும்வாழ் குதியே (32)

வெண்பா

வாழ்த்திட்வாய் தந்தவொரு மாதவனே நெட்டேர
பாழ்த்தபிற விப்பகையைப் பாழாக்க—வூழ்த்தி
அறிவானந் தத்தி லவசம் பிறந்து
நெறியே னிருக்கவருள் செய் (33)

கலித்துறை

செய்யுஞ்சிற் சத்தியை யுள்ளத்திற் சேர்த்திநேந் தேசுபெற
ஐயமில் லாமை யருணிலை பாலிக்கு மான்றபெரும்
பொய்யினை மாற்றிப் பரானந்த போகம் புகட்டுமெங்கள்
தூய்யநெட் டேரப்ப ரானந்தர் பாதந் தொழுமவர்க்கே (34)

எழுசீர்க் கழிநெடிலா சிரிய விருத்தம்

தொழுதிடு மடியார் தொழும்பனு மென்னைத்

தொண்டுகொண் டாண்டனை தூரிசில்
பழவடி யானென் றுலகெலா மறியும்
படிக்குமெய்ப் பத்திவை ராகம்
வழுவிலா திலக வரந்தரு பணியும்
வைத்துளே னின்னிடங் கண்டாய்
செழுமைசேர் நெட்டூ ரப்பரா னந்தச்
செல்வமே சீரருட் கடலே (35)

அகவல்

கடிநகர் நெட்டூர்க் கருணைசேர் முனிவன்
அடியிணை தொழுவார்க் கந்தகன் பகையும்
படிதரும் பிரமன் பக்ஷமுந் தீர்க்கும்
தொடியுலா மகளிர் தொடர்பையே கொடுக்கும்
மடிதரு மாரன் வலிமையு மாற்றும்
கொடிநரி சோணாய் கொக்கரித் துண்ணும்
படிவள ருடலின் பாச வெறுப்பும்
முடிகுலா மரசர் மூவுல காட்சி
பொடியெனக் கருதும் புத்தி விலாசமும்
அடிசிலேற் றுண்ணு மகங்களிப் புறவும்
படிமைபூண் டொழுகும் பண்புடைத் தகவும்
மடிவுவந் துறினும் மனம்பதைத் தழியாப்
படினமாந் திடமும் பக்திவை ராகமும்
அடியவர்ப் பணியு மார்வமுந் தருமே (36)

வெண்பா

ஆர்வமிகு நெட்டூர்க் கரசேயுன் மெய்ப்பெயரால்
ஏர்பெருகு கந்தன்விழா வெய்தியதென்

வார்சடைமேல்

உன்மத்தை வேய்ந்தோற் குணர்வுறுத்து சாமியெனுந்
தன்மைத்தை யுன்னியோ சாற்று (37)

கலித்துறை

சாற்றத் தகுந்தற் சுதந்தர மெற்கிலை சாமியுனை
போற்றற் கிவனு மெவனு மடமையிற் புன்மொழிகொண்
டேற்றத் துணிந்தனன் சேயுரை யாமென வேற்றருளாய்
கூற்றைக் கடிந்த குணத்தோய் நெட்டேரிடங் கொண்டவனே

பன்னிரு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

கொண்டல் படியுஞ் சோலைகள்சூழ்
கோக்கள் வார்க்கும் நெட்டேரில்
குமரக் கடவு ளருளுறச்செய்
குழந்தை மூத்தா நந்தனெனக்
கொண்ட நாமக் குருவருளாற்
கொடுத்த வரத்தைத் தொடுத்தாற்றிக்
கூறுஞ் சுருதி வழித்தாகக்
குடும்பத் தமர்ந்து நிலையுணர்ந்து
தொண்டர் துதிக்க விண்டலத்தோர்
தொழுது வியக்கத் துணைவியுடன்
துரியக் கோவி லமர்ந்தவுன் றன்
றுணைத்தாள் பூசித் தவசமுறு
விண்ட தகவோர் புடைசூழ
விளங்கு மப்ப ரானந்தா
மெய்ப்பா மாலை புனைந்தேத்த
வெளிநேற் கிசைந்தாய் குருமுனியே (39)

## அகவல்

முனிவும் பகையு முற்றத் துறந்த
பனிமதிச் சடையான் பங்கிடங் கொண்ட
பார்வதி பவானி பராபரை பகவதி
ஆரியை யம்மை யபிராணி யம்பிகை
அந்தரி யமலை யாரணி யையை
சுந்தரி தேவி துர்க்கை கௌரி
சங்கரி சத்தி சாம்பவி யுருத்திரை
புங்கவி நாயகி பூரணி காரணி
உமையவள் நாரணி யுமைசிவை முக்கணி
இமைய வல்லி யாமளை சாமளை
வலைமகள் திரிபுரை மரகத வல்லி
கலைகொளி நீலி கார்த்திகை சூரி
மாதங்கி விமலை மகிடா சுரஹரி
யாதியா மின்ன வதுலநா மங்கொளுஞ்
சூலா யுதைதரு சுடர்வேன் முருகனை
காலாக் கொண்ட கருணை நிதிசேர்
மந்திர நகர்க்கணித் திந்திர வளங்குலாய்ச்
சுந்தரச் சோலையு நந்தனக் காவும்
சங்கினங் தவழுந் தடாககூ பங்களும்
மங்கள குணங்குழீஇ வகைவகை வளரும்
பட்டின மருதூர்ப் பதியமர் புலவன்
அட்டமா சித்திக ளருகர்சின் றேத்தும்
மகராஜ பூபனு மதுர வல்லியும்
மகம்பல வியற்றி வரம்பல பெற்றும்
புத்திரப் பேறிறும் பூதுற வடைந்துமேல்
வித்தகர்க் குண்ணன் மேன்மைசேர் விமலஞ்

சத்தியஞ் சாந்தந் தயைபொறை சீலம்
நித்திய வநித்திய நிண்ணய விவேகம்
இகபர விராக மிருதிரி சமாதிகள்
அகமுறு பிரேமை யாகிய சாதனம்
வழுவிலா தொழுகு மைத்திரி யாதியாம்
விழுமிய குணங்கள் மேற்சன னங்களிற்
பழகித் திரண்டெனப் பாரெலாம் புகழக்
குழவியூங் கீன்று குலதெய்வ நாமத்து
ஐயன் பெருமா னௌவணிந் தாயபின்
மெய்யன் குருமெய்ஞ் ஞானியென் றுயர்த்த
அன்னவா வொழிரு மப்பரா னந்தனும்
கன்னன்மூக் கனியொடு கண்டுதேன் பானெய்
சேர்த்துக் குமைத்துத் திரட்டிய வமிர்தினைப்
பார்த்து முணுது பாகதி விலக்காப்
போவது மடமை புந்தியே யிக்கணம்
ஆவல்கொண் டன்றே ஞலயம் வலம்வந்து
ஓர்கண மாயினு முள்ளன் புடனே
ஆர்கலி மான வார்வமுண் ணிறைத்து
தோத்திரம் விரித்துத் துடிதுடித் துன்குறை
மாத்திரந் தெரித்து மற்றவை கேவாப்
யாத்திர ஞகிப் பாதமே கதியென
கடைப்பிடித் துறுதியிற் கவல்வொழித் திருத்தியேல்
அருளா திருத்த—லவன்பிழை யாகும்
மருளா திருக்கின் வசைய துனக்கிலை
ஆதலாற் கேணீ யவைரந்தவிம் மதியைக்
காதலாற் கடுவன் கைப்பிடி யொத்துத்
தவமிதே யென்னத் தளர விடாமல்
தவராஜ சிங்க தாசனு வாயேல்

அவனே குருவா யமைந்தரு ளோக்காற்
சிவஞா னச்செழுஞ் சீரினை நல்கப்
பவமாஞ் பஞ்சியை பைங்கனற் படுத்தி
உவமான மில்லா வோர்மொழிக் குறியைப்
பகர்ந்து நிறுது பதைப்பினை மாற்றி
அகமெனும் போத மணுகா தகற்றித்
தன்னடி யுன்முடி சார்த்திமாண் சுகத்தையும்
மன்னவுஞ் செய்வான் மகாகுரு மணியே.

ஓம் தத் ஸத்,

நான்மணிமாலை முற்றிற்று.

ஶ்ரீ

சத்குருகடாக்ஷம்.

# ஶ்ரீமத் அப்பரானந்தர்,

# தோத்திரமாலை.

விருத்தம்.

வேதமும்மை விளங்குவபோல் விளங்குவிமலா வெவற்றினுக்கு
மாதி யாக நிலவுமய வடியே விடத்தும் வதிந்துள்ள
காத வப்ப ரானந்த ஞான குருவே மகிழ்ந்துனையான்
ஓத வமுத வாக்கருளா யூழ்செய் வினைக ளுலந்திடவே (1)

அகலு முலக வாழ்க்கையினை யடைய விரும்பும் பலசீவர்
புகலும் புன்றேத் துதிகடமைப் பொருந்தேன் கனவின் மறந்
[தேனும்]
இகலு மயன்மாற் கெட்டாத வின்பக் கழலே யிச்சித்தேன்
புகலு மப்ப ரானந்தப் பொன்னே பொருவில் புண்ணியனே (2)

வேறு.

புண்ணியப் பேறே நின்பெருங் கருணைப்
பொற்பதோ வுன்றிருவடியை
கண்ணியான் றினமுங் காணிய வோர்நா
ளுயம்பெறப் பார்த்தில னினிய
வெண்ணிடி னமரர் மகுட கோடிகளுன்
னிணையடி மறைத்தன கொல்லோ

அண்ணலே யப்ப ரானந்த குருவே
யனுதினங் காட்சிதந் தவனே (3)
அருள்பழுத் தொழுகு மப்பரா னந்த
வாண்டவா வென்மனக் குரங்கு
தெருள்விலை மாதர் தனவனுங் காட்டிற்
றிரிந்தவ ரல்குலா மடுவின்
மருள்கொடு மூழ்கி யமிழ்குறு தின்ப
வலையிடை யகப்பட்ப் பிடித்துத்
திருவருட் படுத்தாய் நின்னடிச் சேவை
தெரிசிக்க வேண்டுகேன் சிவமே. (4)
சிவசிவா தேவா அப்பரா னந்தச்
செல்வமே யென்மனக் களிறு
பவமதில் வீழ்த்து மீடனுத் திரயப்
பாழ்வனத் தலைவதோ பக்தித்
தவமெனுந் தொடரார் பாததா மரையாந்
தாணுவிற் றமியனேன் பொருட்டுக்
கவரின்மா பரம முத்தியாம் நிலையிற்
காண்டகப் பிணிக்கையுன் கடனே. (5)
உன்னுதற் கருநின் பாதமென் மனத்தி
லுரைந்ததாற் றியானமே நிலைத்து
மன்னுநன் முத்திப் பேறெனு மோனம்
வாய்ந்தனென் னனுதி—யஞ் ஞானந்
துன்னுவ தின்றி யொழிந்ததே யாகுஞ்
சுடரின்முன் னிருள்விரிந் திடுமோ.
வென்னுவத் திலகு மப்பரா னந்த
வீசனே யொப்பிலா மணியே. (6)
அப்புற மேலோ ரறிவரு மப்ப
ரானந்த முனிவனே யுனைப்போ

விப்புவி தனிலெற் கிரங்கிலை ரில்லை
யிழிவிலென் போல்பவ ரொருவ
ரெப்புவி மீது மிலைசமு சாரத்
திளைத்திறு விவேக சூனியனய்ச்
செப்புதற் குரிய நாயினேன் மாட்டுன்
றிருவுள மிருந்ததென் சிவமே (7)
ஆய்ந்துநன் னூல்கற் றகந்தையாய் வீணு
ளாக்கியே நலியுமென் மனந்தா
னேய்ந்துநின் பாதப் போதிலும் வாக்குன்
னுடைத்துதி கைகளுன் பலிபிற்
றோய்ந்திடக் கண்கள் செவிபுந்தி தியானஞ்
சொரூபத்தி லோங்கநல் வரத்தை
யீய்ந்தருள் செட்டே ரப்பரா நந்த
வீசனே ப்ரமசற் குருவே. (8)
பரமசற் குருவே சுரர்நரர் மிருகம்
பசுபட்சி முதலிய பிறவி
வரவுநா னஞ்சேன் பூருவ கன்ம
வழக்கன்றோ வெவற்றுதிப் பினுநின்
றிருவடித் துணையை மறக்கலா வன்பு
தெற்றெனச் சிறியனேற் குதவில்
ஒருகுறை யில்லை னப்பரா னந்த
வொப்பிலா ஞானவா ரிதியே (9)
ஞானமா ருருவ மெடுத்தவெம் பெரும
நற்றவ வப்பரா னந்த
ஈனமாந் தொழிலெற் றியற்றினு மற்றோ
வின்றக வேற்றநிற் கிமிரும்
கானகம் புவனங் காவிருந் தாலுங்
கைவிடேல் கருணைபா லிப்பாய்

தினராட் சகனென் றெண்பெயர் வேண்டின்
தினனைக் காப்பதே திறனே (10)
திரமுட னான்காச் சிரமங்க டம்மில்
சேர்வுறீஇ மேன்மைசொற் றிடலோ
சிரமமே யல்லா தென்பயன் றருநின்
சேவடிக் கன்புசெய் மனத்தர்க்
குரமுறுங் கவிசெய் திரமுறு முலக
முவப்புட னேத்திசை குணிக்கும்
ஹரஹர நெட்டே ரப்பரா னந்த
அக்ஷய நின்மல வரசே (11)
நின்மலா நெட்டே ரப்பரா னந்த
நேசனே யுலோபமுற் குணங்க
ளென்மனம் புகுந்து பிறர்பொருள் கவர
விசைந்துள கபடவார்த் தைகளை
நன்மைபோற் பேசிப் பகட்டுவ கண்டாய்
ஞாயமோ தடுத்தருட் கண்ணாற்
பன்முறை நோக்கிப் பவித்திர னாக்கற்
பாலதுன் பரந்தயா பரனே. (12)
பரத்தையர் மோகப் படுகுழி யுழன்ற
பாவியே னெனினுமுன் பணியைச்
ஸ்ரத்தையோ டுண்மை யாகயா னியற்றல்
திருவுள மறியுமே யெற்காம்
வரத்தையு நல்கித் தொடுத்தகா ரியங்கள்
மங்கள மாகவு முடித்தம்
பரத்தையு மளிப்பா யப்பரா னந்தப்
பசுபதி பரஞ்சுடர்ப் பிழம்பே. (13)
விதியரி பதவி யற்பமன் னவர்தா
மேலுங்கீ ழோடிமெய் வருந்தி

மதியழி வருத்தந் தெள்ளிதி னுணர்ந்தேன்
வாஞ்சையுன் பதத்ததே மாணத்
துதிபெறு முனது பாதபூ சனையைத்
தொடங்கிடு மனமெனக் கினிய
கதிதரு நெட்டே ரப்பரா னந்தக்
கடவுளே கருணையங் கடலே (14)
கருணையிற் சிறந்த வப்பரா னந்தக்
கருத்தனே பிரமன்மா லிருவர்
இருணைவித் தொளிரு நின்னடி முடியை
யெகினவே னங்களாய்த் தேடி
மருண்மலிந் தயர நீண்டதற் புதமோ
மகிழ்ந்துநீ யடியெனுக் கெளிவந்
தருண்மழை பொழிந்து காட்சிதந் தாண்ட
வற்புத மதனினும் பெரிதே (15)
புண்ணிய மெல்லா மோருரு வாகப்
பொலிந்தொளி ரப்பரா னந்தக்
கண்ணினுண் மணியே பிரமனால் வகுத்த
கஷ்டமுஞ் சுகமுமா முறியைத்
திண்ணிய வுனது வீக்ஷணச் சிதலாற்
சிதைத்துமேன் முத்திவாழ் வினையா
னெண்ணிய படியே யிம்மையி னல்கி
லினிவிதி யுறவெனக் கிலையே (16)
என்னுளத் திலகு மப்பரா னந்த
வீசனை மனமொழி மெய்யா
லுன்னுவோர் துதிப்போ ருயர்திருப் பணிகட்
குறுதியா நிதிபுரித் துதவு
மன்னவர் திருத்தாட் பொடிமுடிக் கணியா
வாக்கினே ரவர்களே யென்னை

வின்னமொன் றின்றி விற்கவுங் கொளவும்
மேற்கொளும் விபுதரா குவரே (17)
சுருதியிற் கூறுந் தனிமுதற் சிவமே
ஜோதியே அப்பரா நந்தத்
திருவுரு வுடையாய் நின்பணி புரியத்
தெரிகிலேன் றெரிவிக்கி னிசைவேன்
பொருசிலை கல்லா லடியெறி படலோ
பூசைகள் தோத்திரந் தியான
நிருவிகற் பாதி சமாதிக ணிலையி
னியமமோ வெதுகளிப் புனக்கே. (18)
எதுநினக் குவப்பென் றெளியனேன் வழங்கி
யேத்துவ தெலாமுண தென்று
லதுவிது வென்னல் வழக்கன்றோ வாயி
னகமமர்ந் தென்னிடத் துளது
முதுமொழிப் பெரியோ யுன்னிடத் திலது
முரணுடை யென்மனமொன்றே
வதுவைசேர் நெட்டூ ரப்பரா னந்த
வள்ளலே மாசிலா மணியே (19)
மாசிலாச் சருவ வியாபக னையும்
மரணஜன் மப்பய நீங்கி
யாசிலா முத்தர்க் கெளியவ னையு
மமர்ந்தவா வப்பரா னந்தத்
தேசிகா வுனது பாதவர்ச் சனையுந்
தியானமுங் கதியெனத் தேர்ந்தேன்
ஓசிவா வாவா பிரணவ சொரூபா
வுளமுப சாந்தியுந் துறவே (20)
உறவலா வுறவை யகற்றியுத் தமர்பா
லுறவுகொ ளன்புவந் தூரப்

பிறவியிற் பிரமா நந்தமே லவயாம்
பேரின்ப முத்தியிற் கிடையூ
றறவுடை யுலக வாதனை நீங்க
வம்புய நின்பதம் பணிந்தேன்
துறவினிற் சிறந்த வப்பரா னந்தத்
துய்யவா யுய்யுமா வருளே. (21)

உய்யவோர் தெய்வம் அப்பரா னந்த
வுனையன்றி யுலகினிற் காணேன்
செய்யவோ பூசை விரதங்க டவமுன்
திருவடி யருச்சனை யாகுந்
துய்யமா யோக நின்றிரு வுருவச்
சோதியை யுளத்தினிற் பதித்தல்
ஐயமின் ஞான நின்பணி விடையை
யகன்றிடா தொழுகுத லருளே. (22)

தானவர் தேவர் முனிவரர் பணியுந்
தன்னிக ரற்புதா நந்த
மோனசற் குருவே மூவுல கத்து
முகிழ்சுக வாழ்விழி வெனத்தேர்ந்
தீனமின் னெருப்பி லாழியி லிழிந்தோர்
இன்னரக நீர்கரை கேடன்
மானவுன் பதங்க ளடைந்திடப் பதறி
வந்தன னஞ்சலென் றருளே (23)

வந்தோர் வரவை யோர்கிலா தெண்ணி
மனஞ்செலும் வழியெலா மலைந்தேன்
அந்தகன் வருமே லெவ்வழி யுய்வே
னையவோ வித்தனு வமர்ந்த
சொந்தவாழ் விழந்து துரிசனு முன்னர்த்
துணையுனைச் சிக்கெனப் பிடித்தேன்

சந்ததம் புரப்பா யப்பரா னந்த
    சாமியே ஞான சற் குருவே (24)
ஈசனே நெட்டே ரப்பரா னந்த
    வினையிலாப் பரமசற் குருவே
நேசனே காவி பூதிருத் திராக்க
    நினைபொழு தளித்தனை நீயே
தாசனைக் காந்த மூசியை யிழுக்குந்
    தன்மைபோற் றளர்வற வீர்த்துப்
பூசனைக் குரியோ னாக்கவும் பணியாய்
    புண்ணியா கண்ணினுண் மணியே. (25)
என்செயல் யாதும் பயனிலை நின்சீ
    ரிணையடிக் கியற்றிடுந் தொழும்பும்
உன்செயல் கொண்டே பெற்றனன் விடினு
    னுய்குதற் கிடமிலை யோர்க
தென்செயல் குலவு நிட்டைமா நகரிற்
    றேசொளி பரப்பவீற் றிருக்கும்
இன்செய லுற்ற வப்பரா னந்த
    வெந்தையே யிமையவர்க் கேறே. (26)
பொருப்புநே ருறப்பொன் குவிக்கினுங் கசடர்
    பொருளெனிற் கையினுற் றீண்டேன்
விருப்பில தெனைத்து மன்பரீந் திடினோ
    விரைவிலேற் றவரடி பணிவேன்
மருப்புறழ் முலையின் னாரனு ராக
    மயக்குள நலிந்துகொண் டகலா
திருப்பதஞ் தொழிக்கி னப்பரா னந்த
    வெந்தையே யினிதுவாழ் குவனே (27)
இரங்குத லுனக்கே தொழிலெனக் கோடி
    யினைத்தலே யிருவினை யேனை

மரங்குலாங் கவிபோ லாதுமார்ச் சால
வகையினு மரபுகைக் கொண்டு
திரம்பெறச் சேர்ந்து சாந்தியை மருவச்
செய்யவோ நிஷ்டைமா நகரி
லுரங்கொடு வந்தா யப்பரா னந்த
வுத்தமா வித்தக மணியே [28]

உத்தம ருளத்துஞ் சுரர்முடி மீது
முறவுகொண் டமர்திரு வடிப்போ
தெத்தகைத் தாலென் மனக்கண்மீ தமரா
திருத்தவென் றறைந்திடிற் கல்லை
யொத்ததென் றுரைக்கிற் கைலையுங் கல்லே
யுஃதுண ராயெனி னுன்னைப்
பித்தனென் றன்று ளப்பரா னந்தா
பேசிய தொண்டர்சொற் றகுமே [29]

தொண்டரிற் பெரிய வப்பரா னந்த
சுவாமியே நின்றிரு வடியைக்
கண்டபோ தடியேன் வினையிரிந் தோடக்
கணக்கன்றோ கல்லெறி முன்னர்
மண்டிய காக சாலங்க ணில்லா
மனமகிழ்ச் தெனைக்கடைக் கணித்தே
யெண்டரு மடியார் வரிசையி லிருத்தி
யேற்றருள் வாய்பர சிவமே (30)

மாதரா திகண்மேற் போசெலா மொருங்கே
மால்கொடு மதிமருண் டுழன்று
பாதக னேனை னெனையருட் கண்ணாற்
பார்த்திடிற் பருவரு மிந்த
வாதனை வருமோ கைவிடா திகழேல்
வழிவழித் தொண்டனு னலமே

வாதலி னெட்டே ரப்பரா னந்த
வடிகளே யருள்வதுன் கடனே (31)
பார்விசும் பாதி யிடத்திருந் தென்னைப்
பார்த்திடின் மிகவெளி தாக
வேர்கொண் மீனேக்கி னொளியனை நோக்கின்
இன்புற மெய்யுணர் வெய்தி
யார்வமுற் றம்மா நின்றிரு வடிக்கா
ளாவதிற் றடையிலை கடுக்கைத்
தார்புனை முடியா யப்பரா னந்தா
தயைசெய்யாய் வேதவித் தகனே [32]

ஓம் தத் ஸத்

## தோத்திரமாலை முற்றிற்று.

உ

சத்குருகடாக்ஷம்.

நெட்டூர் மகாஜனவீதியில் 1091-ம௵ சித்திவிநாயகர் சந்தானகோபால கிஷ்ணப் பிரதிஷ்டை கும்பாபிஷேகதினத்தில் ஷை நூலாசிரிய ரியற்றிய வாழ்த்துக் கவிகள்,

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சத்தியஞா னஞ்சாந்தம் பரவுநெட்டூர் வாழுஞ்
சாமியப்ப் ரானந்த சற்குருவைப் போற்றிப்
பத்திசெயும் அந்தணரு மற்றமுள்ளார் பலரும்
பழவினைகள் தணந்தருளாம் பாக்கியத்தை வேண்டிப்
புத்திவிதி பூருவமாச் சித்திவிநா யகர்க்குப்
பூரணகும் பாபிடே காதிபல வியற்றி
நத்தியதற் கெண்மடங்காம் வரங்கள்பல பெற்று
ஞானநெறித் துறைதெரிந்து நலம்பெறவாழ்ந் தனரே, (1)

வேறுவிருத்தம்

ஆதவனம் புலியுலவு மகண்டா நந்த
வப்பாா நந்தர்திருக் கோவில் கொண்ட
தாதவிழுஞ் சோலைகள்சூழ் நெட்டூர் வாழுஞ்
சாந்தமுறும் பூசுரரா திகள்வாழ்ந் தோங்க
மாதவன்சந் தானகோ பால கிருஷ்ண
மாமூர்த்தி பிரதிட்டை யாற்றி வானோர்

காதலுறக் கும்பாபி டேகஞ் செய்தக்
கடவுளருள் பெற்றதுவுங் கருணை தானே. (2)

### வேறுவிருத்தம்

மண்டலம் புகழுசெட்டோர் வாழ்ந்திடு மறையோர்வாழி
அண்டருந் துதிக்குமப்ப ராநந்த குருவும்வாழி
கண்டவிவ் வாநந்தத்தைக் கருதிய நேசர்வாழி
தண்டமிழ் சைவமாதி சமயங்கள் வாழி வாழி (3)

## முற்றிற்று.